சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.இரா.தனபாலன், எம்.எஸ்சி(விவ)

திருவள்ளுவராண்டு 2054/சோபகிருது/புரட்டாசி - 17

செ.மு.ஆணை எண்: அநி1/544/2022(3)

நாள்: 04.10.2023

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை பணிநியமனம் - செல்வி.என்.ஸ்ரீவிஷ்வவாணி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது), வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், திருப்புவனம் - இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அநிபி.6/30622/2021, நாள்: 23.12.2021.
2. சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் செயல்முறை ஆணை எண்: அநி.1/544/2022, நாள்: 24.01.2022.
3. சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் கடிதம் எண்: அநி.1/544/2022, நாள்: 17.11.2022.
4. அரசாணை (3டி) எண்: 126, வேளாண்மை - உழவர்நலத் (வேநி-9) துறை., நாள் : 14.08.2023.
5. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் கடித எண் : அநிபி.8/143463/2022, நாள்: 07.09.2023.

*****

ஆணைகள்:

பார்வை (1), (2)-இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, செல்வி.என்.ஸ்ரீவிஷ்வவாணி அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிகப் பணியமர்வில் திருப்புவனம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)-ஆக பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டு, பணிநியமனம் செய்யப்பட்ட பணியிடத்தில் 27.01.2022 முற்பகல் அரசுப் பணியேற்றுள்ளார்.

2. மேலும், தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர் ஆதலால் தனியரது பணியினை அன்னார் அரசுப் பணியேற்ற நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உரிய ஆணையினை அரசிடமிருந்து பெற்றுத்தர கோரி பார்வை (3)-ல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதத்தின்படி, சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு பணிந்தனுப்பப்பட்டு, பார்வை (5)-ல் கண்டுள்ள கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற பார்வை (4)-இல் காணும் அரசாணையின்படி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அரசாணை எண். 1773/2023, நாள் : 12.06.2023 மற்றும் மனித வள மேலாண்மைத்துறையின் அரசாணை எண். 1773/2023, நாள் : 04.08.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் தனியரது பணியினை அரசுப் பணியேற்ற நாளான 27.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. அதனைத் தொடர்ந்து, தனியர் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் அரசுப் பணியேற்ற நாளான 27.01.2022 முற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. மேலும், தனியர் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்திட வேண்டும் (Completion of Two Years Service within a continuous period of Three Years) என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

4. தனியருக்கு 27.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதால் தனியர் தனது முதல் வருடாந்திர ஊதிய உயர்வினை பெறத் தகுதியுடையவராகிறார்.

ஒம்./-இரா.தனபாலன்,
வேளாண்மை இணை இயக்குநர்,
சிவகங்கை.

பெறுநர் :

செல்வி.என்.ஸ்ரீவிஷ்வவாணி,
இளநிலை உதவியாளர்(பிணையமற்றது),
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்,
திருப்புவனம் (மூலமாக.)

நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், திருப்புவனம்.

(அரசாணை (3டி) எண்.126 வேளாண்மை உழவர்நலத் (வேநி-9) துறை, நாள் : 14.8.2023 (நகல்) இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது). தனியர் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல் : சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது (அநிபி.8 பிரிவு).
நகல் : கண்காணிப்பாளர் (பொது) / (பணிக்குழு-2), இவ்வலுவலகம்.
நகல்: பணிப்பதிவேட்டிற்கு.
நகல் : இருப்புக்கோப்பு.
உபரி : 1

//ஆணைப்படி//

5/10/23
ஆட்சி அலுவலர்.

மே.கு : அ1/23-24, நாள் : 16/10/23

05/10/23

நகல் அனுப்பப்படுகிறது.

பெறுநர் :

ந.ஸ்ரீவிஷ்வவாணி,
இளநிலை உதவியாளர் (பி.அ),
திருப்புவனம்.

வேளாண்மை உதவி இயக்குநர்
திருப்புவனம்-630 611

\\Computer22\e\2023-HCL\Sep-2023\Est\Ani-1.docx

சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை-உழவர் நலத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி என்.ஸ்ரீவிஷ்வவாணி என்பவரின் பணியினை 27.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, ஆடி மாதம் 29-ம் நாள்

அரசாணை (3டி) எண்.126 நாள்:14.08.2023

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 143463 / 2022, நாள் 07.02.2023.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இராமநாதபுரம், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் கமுதி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் துணை வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்த போது 18.12.2015 அன்று, பணிக்காலத்தில் மரணமடைந்த அமரர் இரா.நடராஜன் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகள் செல்வி என். ஸ்ரீவிஷ்வவாணி என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அநிபி6 / 30622 / 2021, நாள் 23.12.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்து, சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அநி1/544/2022, நாள் 24.01.2022-ன்படி, தனியர், சிவகங்கை, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் திருப்புவனம் வட்டாரம், செல்லப்பனேந்தல், தென்னை ஒட்டு சேர்ப்பு மையத்தில் இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) 27.01.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 27.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையமற்றது) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி என். ஸ்ரீவிஷ்வவாணி என்பவரின் பணியினை 27.01.2022 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு **ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.**

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ. சா. எண்.1773/2023, நாள். 12.06.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண். 1773/2023, நாள்.04.08.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
செல்வி என்.ஸ்ரீவிஷ்வவாணி, இளநிலை உதவியாளர், (பிணையமற்றது)
வழி: வேளாண்மை ஆணையர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.1773 / வேநி9 / 2023
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

ஆட்சி அலுவலர்
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்